**சேருவில பிரதேச சபை - 2022**

--------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சேருவில பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் சேருவில பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை,

பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தியுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | LDSP கருத்திட்டத்தின் கீழான PT(I) கருத்திட்டத்திற்காக 2021 ஆணடிற்குரியதாக கிடைத்திருந்த ரூபா 1,850,163 ஆன தொகை மீளாய்வாண்டின் மூலதன வருமானமொன்றாக செம்மையாக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளவதாக மற்றும் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாத விதத்தில் காலப்பகுதிக்குரிய கொடுக்கல் வாங்கல்களை சரியாக குறித்துக் கொள்ளவதென. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வெண்டும். |
| (ஆ) | 2020 மற்றும் 2021 ஆண்டுகளிற்காக முறையே ரூபா 45,900 மற்றும் ரூபா 49,200 ஆன கணக்காய்வு கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக கணக்கு தயாரிக்கப்டுவதென. | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ஐந்தொகையின் காண்பிக்கப்பட்டிருந்த மக்கள் வங்கியின் நடைமுறை கணக்கில் நிலவிய ஆரம்ப மற்றும் இறுதி மீதி | காசப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது தவறுதலாக குறித்த மீதிகள் விடுபட்டுள்ளதென. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | முறையே ரூபா 888,448 மற்றும் ரூபா 1,529,948 ஆன தொகை காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது செம்மையாக்கிருக்கவில்லை. | | |
| (ஈ) | மீளாய்வாண்டு மிகை ரூபா 4,964,815 தொகை மூலதன ஈடுபடுத்தலிற்கு வருமானத்திலிருந்து பங்களிப்புச் செய்யும் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் கணக்கு தயாரரிக்கும் போது அதனை ஜர்னல் குறிப்பொன்றின் ஊடாக சரி செய்வதென. | -மேற்படி- |
| (உ) | 2021 சனவரி முதல் ஜுன் வரையான காலத்திற்காக கிடைத்த ரூபா 570,832 ஆன முத்திரைக் கட்டணம் மீளாய்வாண்டு வருமானமாக கணக்கீடு செய்திருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | 2021 யூலை முதல் திசெம்பர் வரையான காலத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 413,800 தொகை மற்றும் 2022 ஆண்டிற்காக அறவிட வேண்டிய நிலுவை முததிரை கட்டணத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | மீளாய்வாண்டிற்குரியதாக கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 9,346,913 தொகை குறைவாக கணக்கிடு செய்யப்பட்டிருந்தது. | இது தொடர்பாக சேருநுவர மக்கள் வங்கியிடம் புதுப்பிக்கும் அறிவித்தல் பெற்றுக் கொண்டு சரியான வட்டியை கணிப்பிட்டு குறித்த அளவை சரியாக கணக்கீடு செய்வதென. | -மேற்படி- |
| (ஏ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ரூபா 1,647,961 ஆன கிடைக்க வேண்டிய சம்பள மீள்நிரப்பல் மற்றும் அங்கத்தவர் கொடுப்பனவுகளின் பெறுமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை. | தவறுதலாக விடப்பட்டுள்ளதாக மற்றும் அடுத்த ஆண்டில் சரி செய்வதென. | -மேற்படி- |
| (ஏ) | முன்னைய ஆண்டில் திசெம்பர் மாதம் சம்பள் மீள்நிரப்பல் மற்றும் அங்கத்தவர் கொடுப்பனவு தொகை ரூபா 1,412,520 நடைமுறை ஆண்டில் பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான 04 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை | பதில் வழங்கப்படவில்லை. | பதிவேடுகளை உரியவாறு பேணப்பட |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் அதற்கு நேரொத்த பதிவேடுகளின் கூட்டுத்தொகைகளிடையில் ரூபா 28,775 ஆன வித்தியாசம் ஆனது. | | வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான ஆவண சான்றுகள் இல்லாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ரூபா 145,058,911 பெறுமதியான 05 கணக்கு மீதிகளின் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவனங்கள், நாளாதுவரையாக்கப்பட்ட நிலையான வைப்பு சான்றிதழ்கள் மற்றும் இருப்பு கணிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது திருக்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதென. | கணக்கு விடயங்களிற்குரிய சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வெண்டும் |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) | 24 ஆம் பிரிவு | சபையினால் நிர்மாணிக்கப்பட்ட பாதைகளை இன்வென்றியிற்கு உட்படுத்தி இருந்ததுடன் அந்த அனைத்து பாதைகளையும் வரர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் பாதைகளை வர்த்தமானியில் பிரசுரிக்க தேவையான நடவடிக்கை எடுப்பதென. | காணப்படும் அனைத்து பாதைகளையும் இன்வென்றியில் உட்படுத்தி வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 134 ஆம் பிரிவு | பிரதேச சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள முன்னேற்றமடைந்த பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி | எதிர்காலத்தில் விதவரி வர்த்தமானியில் பிரசுரிக்க தேவையான நடவடிக்கை | பிரதேச சபை சட்டத்தின் 134 பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் வரி விதிக்க நடவடிக்கை எடுத்திருக்கவிலலை. | எடுப்பதாக. | |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி | | | |
| (i) | 143 ஆம் விதி | ரூபா 6,564,471 ஆன திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்களை வகைப்படுத்தி அதன் பிரகாரம் கணக்கீடு செய்திருக்கவில்லை | எதிர்காலத்தில் உரியவாறு வகைப்படுத்தி சரியாக கணக்கீடு செய்ய தேவையான நடவடிக்கை எடுப்பதென. | பிரதேச சபை விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 218 ஆம் விதி | கிரயம் ரூபா 122,078,290 ஆன காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு முறை கணிப்பீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரிய வாறு நடவடிக்கை எடுப்பதென. | பிரதேச சபை விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணங்கள் 1645 மற்றும் 1646 | 08 வாகனங்களில் ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேவையானவாறு நடவடிக்கை எடுப்பதென. | நிதிப்பிரமாணங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,803,721 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 4,561,496 ஆகும்.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட் ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வாடகை | 5,346 | 3,819 | 2,956 | 2,064 | 5,231 | 1,015 | 1,015 | 1,161 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 695 | 706 | 706 | - | 645 | 494 | 494 | - |
| ஏனைய வருமானம் | 14,163 | 12,757 | 11,041 | 1,716 | 13,603 | 10,420 | 7,177 | 3,243 |
| | ------- | -------- | --------- | -------- | --------- | -------- | --------- | -------- |
| | -- | | | -- | | - | - | - |
| கூட்டுத் தொகை | 20,204 | 17,282 | 14,703 | 3,780 | 19,479 | 11,929 | 8,686 | 4,404 |

### 2.2.2 வருமானத்தை சேகரிப்பதற்கான செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ரூபா 863,333 ஆன நிலுவை வருமானமொன்று காணப்பட்டதுடன் அவற்றின் 2011 முதல் 2020 இடைலான காலப்பகுதிற்குரிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 1,150,031 ஆனது. | குறித்த நிலுவை வாடகை தெகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வருமானம் அறவிட முறையான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரித்து நிலுவை தொகையை விரைவில் அறவிட வேண்டும். |

## 3. செயற்ாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அன்பளிப்பாக கிடைத்த 09 நிலையான சொத்துக்களின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | மதிப்பிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைக்கு செந்தமான ரூபா 9,223,824 பெறுமதியான 11 வாகனங்கள் செயலற்று காணப்படுவதடன் அந்த வாகனங்களிற்காக பொருத்தமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனங்களை திருத்துவதற்கு போதியளவான நிதி சபைக்கு இல்லாததால் மற்றும் எதிர்காலத்தில் தேவையான நடவடிக எடுப்பதென. | விரைவில் திருத்துவதன் மீது அல்லது பொருத்தமான செயற்பாட்டை எடுப்பதன் மீது கவனம் செலத்த வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபையினால் 2014 ஆண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா | குறித்த திரையை திருத்தற்கொள்ள தேவையான | விரைவல் திருத்தி பயன்பாடிற்கு |

| | | | |
|---|---|---|---|
| | 938,000 செலவிட்டு விளம்பரம் அறிவித்தலிற்காக பொருத்திய LED விளம்பர பலகை 2014 மார்ச் 14 திகதி முதல் செயலற்று கணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் அதனை திருத்தி பயன்படுத்திருக்கவில்லை. | நடவடிக்கை மீது கவனம் செலுத்துவதென. | எடுத்தல் வேண்டும். |
| (இ) | பிரதேச சபையினால் 2014 ஆண்டின் போது ரூபா 19,000,000 ஆன கிரயமொனறை மேற்கொண்டு நிர்மாணித்த சுடலை மீளாய்வாண்டினுள் எவ்வித பயன்பாடுமின்றி காணப்பட்டது. | இது தொடர்பாக கவனம் செலுத்தி மேல் உத்தியோகத்தர்களின் அறிவுரைகள் பெற்றுக் கொண்டு தேவையான நடவடிக்கை எடுப்பதென. | விரைவில் பயன்படுத்த முடியுமானவாறு செயற்பாடுகளை எடுக்க வெண்டும். |
| (ஈ) | ரூபா 7,191,123 ஆன கிரயமொன்றை மேற்கொண்டு நிர்மாணித்த சேருவில நகர மண்டபத்தை போதிய வருமானம் கிடைக்கும் வகையில் மூலஉபாங்களை பின்பற்றாததால் மீளாய்வாண்டிலும் ரூபா 3,000 வருமானம் மாத்திரம் ஈட்டப்பட்டிருந்தது. | சேருநுவர நகர மண்டபத்தை வாடகைக்கு வழங்குவதால் 2023 மார்ச் 20 திகதியளவில் 2023 ஆண்டிற்குரியதாக ரூபா 31,500 ஆன தொகையை அறவிட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இந்த வருமானத்தை அதிகரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுப்பதென. | முறையாக திட்டமிட்டு வருமானம் ஈட்டுவதற்கு செயற்பாடுகளை எடுக்க வெண்டும். |
| (உ) | 2021 ஒக்தோபர் 12 ஆம் திகதி சபையினால் கொள்வனவு செய்த ரூபா 485,500 பெறுமதியான மூலப்பொருள் அறைக்கும் இயந்திரம் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. | மூல பொருள் அறைக்கும் இயந்திரத்தை இந்த ஆண்டில் பயன்படுத்த தேவையான நடவடிக்கை எடுப்பதென. | விரைவில் பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேருவில பிரதேச சபைக்கு கிடைத்த மற்றும் சபையினால் தற்போது பயன்படுத்தப்படும் ரூபா 41,388,101 பெறுமதியான 13 வாகனங்களை கணக்காய்வு திகதி வரையும் சுவீகரித்திற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்வதென. | விரைவில் சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கையை ஒப்பிடுகையில் 10 பதவிகளில் 13 வெற்றிடங்கள் காணப்பட்டன. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பிதருமாறு உரிய அதிகாரிகளிடம் எழுத்து | வெற்றிடங்களை நிரப்ப நடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மூலம் கோரிக்கை செய்துள்ளதென. | |

4. **கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

4.1 **உள்ளக கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளரினால் மேற்கொள்ள வேண்டிய 21 கடமைகளை இனங்கண்டிருந்த போதும் அக் கடமைகள் மேற்கொண்டதாக சான்று இருக்கவில்லை. | இது தொடர்பாக உள்ளக கணக்காய்வாளர் எழுத்து மூலம் மற்றும் வாய் மூலம் அறிவூட்டப்பட்டுள்ளார். எதிர்காலத்தில் தேவையானவாறு நடவடிக்கை எடுக்க அறிவுரைகள் வழங்குவதென. | உள்ளக கணக்காய்வினை முறையாக்க வேண்டும். |

4.2 **பாதீட்டு கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் 05 செலவின விடயங்களில் 28.41 சதவீதம் முதல் 487.54 சதவீதம் வரையும் 04 செலவின விடயஙகில் 10.74 சதவீதம் முதல் 82.31 சதவீதம் வரையும் விலகல் அவதானிக்கப்பட்டததனால் பாதீட்டை ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பணன்படுத்தி இருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. | பாதீட்டை ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்தி நடவடிக்கை எடுக்க கவனம் செலுத்துவதென. | பாதீட்டை முறையாக்க வேண்டும். |

4.3 **சுற்றாடல் பிரச்சினை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் பிரகாரம், திரட்டும் குப்பைகளை வகைப்படுத்தாது சேர்த்துதல், அவைகளை சுதந்திரமாக வெளியிடல், மீள்சுழச்சி செயல்முறையை தொடர்ந்து செய்யாமை, அதிகார பிரதேசத்திற்க உகந்த வெளியிடும் பொறிமுறையொன்றை பின்பற்றாதமை ஆகிய காரணங்களால் காட்டு மிருகங்களினால் கழிவு பொருட்கள் | இது தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதென. | சுற்றாடல் பிரச்சினைகளை குறைத்துக் கொள்வதன் மீது கவனம் செலுத்த வேண்டும். |

நுகரப்படல் மற்றும் உக்காத குப்பைகள் பிரதேசம் பூராவும் சிதறிக் காணப்பட்டன.

**4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தில் உள்ளடங்கிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறித்த பிரமாணங்களை இனங்கண்டிருந்ததுடன் மீளாய்வாண்டினுள் அடைந்தக்கொள்ள வேண்டிய 04 செயலாற்றுகை குறியீடுகளை அடைந்துக்கொள்ள செயற்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | 2030 அளவில் அடைந்துக்கொள்ள வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணுதல் மற்றும் அடைந்துக்கொள்வதன் மீது கவனம் செலுத்த வேண்டும். |